# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.105/2015
# Deposition of P.W.2

| | |
|---|---|
| Name | : Tr. Kamaraj |
| S/o, D/o, W/o | : |
| Caste | : |
| Religion | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:26.10.2022**

**முதல் விசாரணை-**

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் முன்பு வழக்கறிஞர் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 பாலய்யாவை எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 ற்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது எதிரி ஜஸ்டின் ஜெபதாஸ் என்பவர் தக்கலை டாஸ்மார்க் கடை விற்பனையாளர் என்றும், 16.9.2010 அன்று எதிரியிடம் அ.சா.1 ரூபாய் 100 ஐ கொடுக்காமல் மது பாட்டிலும், மீதி ரூபாயும் வாங்கி கொண்டு சென்று விட்டதாக கருதி முன் விரோதம் கொண்டு அன்றைய தினம் பகல் 2.12 மணி அளவில் தக்கலை அரண்மனை ரோட்டில் அ.சா.1 நாயர் கடையில் சாப்பிட போகும் போது எதிரி அ.சா.1 ஐ டாஸ்மார்க் கடை முன்பு வைத்து வழிமறித்து ஆபாசமாக திட்டி அவரை கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு இதோடு செத்து தொலைந்து போ என்று கூ றி கையில் வைத்திருந்த கம்பியால் அ.சா.1 ன் தலையில் 3 முறை அடித்தார் என்றும் அதனால் அ.சா.1 ன் தலையில் இருந்து ரத்தம் வந்தது என்றும், அ.சா.1 சத்தம் போடவே நானும் அங்கிருந்த நபர்களும் , வந்ததால் எதிரி கம்பியுடன் ஓடிவிட்டார் என்றும் ஓடும் போது அ.சா.1 ஐ பார்த்து என் கையால் தான் உனக்கு மரணம் என்று

மிரட்டியதாகவும் பின்னர் நாங்கள் அ.சா.1 ஐ தக்கலை அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் கூறிவிட்டு எதிரிக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.